## அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2013

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

ந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

சொத்தொன்று பயன்பாட்டிற்காக பொருத்தமான நிலைமைக்கு உட்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து சொத்திற்கு பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சொத்தொன்று கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01**

நிலையத்திற்கு மானியமாக கிடைக்கப்பெற்ற மோட்டார் வாகனம் தொடர்பாக பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 3,161,423 தொகையால் குறைத்தும் கணனி உப பாகங்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 19,256 ஆல் கூடுதலாகவும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வகைப்படுத்தல் வழுவொன்றின் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் செலுத்தப்பட்ட பங்களிப்புக்கள் முறையே ரூபா 161,668 மற்றும் ரூபா 1,077,789 அக்கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டிருந்ததுடன், சம்பளம் மற்றும் ஊதியக் கணக்கிலும் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கிரம ஒய அனர்த்தங்களை குறைப்பதற்கான செயற்திட்டத்தின் கீழ் அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 500,000 தொகை நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மூலதன மானியத்தின் அடிப்படையில் முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் நடவடிக்கைகளுக்காக நிலையத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 6,468,909 கூட்டுத்தொகையான செலவினம் தொடர்பாக 05 உறுதிச்சீட்டுக்களுக்குரிய பட்டியல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 தீர்வுசெய்யப்படாத முற்பணம்**

25 மாவட்ட செயலகங்களுக்கு அனர்த்தத்திற்கு முன்னர் தயார்படுத்தல் திட்டங்களைத் தயாரிப்பதற்காக ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 7,245,882 ஆன ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,446,945 ஆன ஏற்பாடு, 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 1,217,215 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 06 மாத தாமதத்தின் பின்னரே தீர்க்கப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 9,860,861 ஆன பற்றாக்குறை நிரூபணமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 8,142,118 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,718,743 ஆல் அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் போது பொறிகள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய அனர்த்த முகாமைத்துவ உபகரணங்களின் பராமரிப்பு செலவினம் அதிகரித்தமை பற்றாக்குறை அதிகரித்தமைக்கு பிரதானமான காரணங்களாக இருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) அனர்த்த இடரினைக் குறைக்கும் செயற்திட்டம்**

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் முகம்கொடுக்கும் வெள்ளம், மண்சரிவு, வரட்சி, சூறாவளி, கடல் கொந்தளிப்பு மற்றும் மிருகங்களின் தாக்கம் போன்ற அனர்த்தம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இனங்காணப்பட்டு அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் இச்செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். அதன் பிரகாரம் சிறிய நடுத்தர மற்றும் பாரியளவிலான 84 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 398,962,375 ஆக இருந்தது. நிலையத்தால் அனர்த்தத்தைக் குறைத்தல் தொடர்பான செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு நிதி வழங்கப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் குறித்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவாற்கான பின்தொடர் பரிசோதனை நாளதுவரையாக்கப்பட்டு மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 25,655,358 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட 07 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 16,472,362 தொகை ஆண்டின் இறுதியில் மாவட்ட செயலாளர்களிடம் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தொகை ஆண்டு முடிவடைந்த உடனேயே நிலையத்திற்கு

அனுப்புவதற்கு அல்லது முறையான பிரகாரம் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப் படவில்லை.

(ii) ஒவ்வொரு செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அதற்குரிய பட்டியல், முறையீட்டு பத்திரங்கள் மற்றும் வேலை நிறைவு செய்தமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 27,905,890 தொகை செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருணாகல் மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்கள் தொடர்பாக அத்தகைய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியாகப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**(ஆ) முன் தயார்படுத்தல் திட்டங்களைத் தயாரித்தல் தொடர்பான நடவடிக்கைகள்**

அனர்த்த இடரினைக் குறைக்கும் நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன் தயார்படுத்தல் திட்டமிடல், நிலையத்தினால் நிறைவேற்றப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது முன் ஆயத்த திட்டமிடலுக்காக 295 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 6,972,933 தொகை மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. 295 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் இறுதியில் செய்யப்பட்ட வேலை தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்துச் சமர்ப்பிக்காத காரணத்தால் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட காலம், சமூகமளித்தவர்களின் பொறுப்பேற்றல் மற்றும் சிக்கல்களைக் குறைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகளைப் பெற்றுக்கொள்ள கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் 2008 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த தகவல் தொடர்பு நிலையம் (SLT Hub) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 யூலை 31 ஆம் திகதி வரையிலும் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(ஆ) பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த வழங்கல் அல்லது சேவை என்பவற்றிற்காக நேரடியாக கொடுப்பனவு செய்ய முடியுமாக இருக்கையில் மாவட்ட செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த வாகனங்களின் திருத்தத்திற்காக மாவட்ட செயலாளர்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 402,987 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கையின் நகரங்கள் தொடர்பாக அனர்த்த முழு நகர அபிவிருத்தி செய்தல் மற்றும் தந்திரோபாய மார்க்க முன் அறிவுறுத்தலை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையினால் ரூபா 12,484,343 தொகை நிலையத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையில் ரூபா 4,369,506 தொகை குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்படாமல் பொதுத் திறைசேரிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலையத்தினால் அவசர பொறுப்பேற்றலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் ரூபா 15,510,050 தொகை பெறுமதியான 08 வகையான உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் நிலையத்தின் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

(உ) முன்னைய ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் அனர்த்தம் தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டுவதற்காக பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டிருந்த ரூபா 1,454,035 பெறுமதியான 1,960 புத்தக தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

### 4.3 வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட நிலையத்தின் சொத்துக்கள்

அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பொறுப்பேற்றல் இயலளவை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டில் கடன் உதவி அடிப்படையில் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 19,500,000 பெறுமதியான ஜீப் வண்டி, 2010 நவம்பர் மாதத்திலிருந்து வெளித்தரப்பினரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கோவை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 ஏப்ரல் 11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 31 பதவிகள் வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அப்பதவிகளில் 01 பணிப்பாளர், 07 பிரதி பணிப்பாளர்கள் மற்றும் 03 தொடர்பாடல் தொழிநுட்ப வடிவமைப்பாளர்கள் தொடர்பாக 02 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2014 யூலை 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தில் அனர்த்தத்தை தவிர்த்தல் மற்றும் குறைத்தலுக்கான பிரிவு, பணிப்பாளர்(செயற்பாடு) மற்றும் 03 உதவி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருந்த போதிலும், செயற்திட்டங்களின் பின்தொடர் நடவடிக்கை பரிசோதனைக்காக தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரச்சட்டத்தை உருவாக்குதல்

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரச்சட்டம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் திருத்தம் செய்யப்பட்டு சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு 2014 யூன் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அந்த வரைவு அதிகாரச்சட்டத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

### 5.2 தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம்

தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் காணப்படுகின்ற பொறுப்பேற்றல் நடவடிக்கைகளை ஒன்று சேர்த்து சகல அனர்த்தங்களுக்கும் முகங்கொடுப்பதற்காக தேசிய அவசர சந்தர்ப்ப செயற்பாட்டுத் திட்டமொன்று 2010 ஆம் ஆண்டின் போது தயாரிப்பதற்கு

ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 செப்தம்பர் 15 ஆம் திகதி வரையிலும் வரைவு நிலையிலேயே காணப்பட்டது.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிலையத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக 02 கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தமையால் நிலையத்தின் நடவடிக்கைகளை போதியளவில் மேவுகை செய்யக்கூடிய வகையில் விரிவான கணக்காய்வொன்று மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கு நடவடிக்கைகள்
(ஆ) முற்பண தீர்ப்பனவு
(இ) அனர்த்த இடரினைக் குறைக்கும் செயற்திட்டங்களை வழிநடாத்தல்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான மானியம்